**தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச்செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்களை கையேற்றுக் கொள்ளல் ரூபா 22,960,315 ஆக இருப்பினும், நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றின் படி அது ரூபா 25,560,841 ஆக இருந்தமையினால் ரூபா 2,600,526 க்கான வேறுபாடு காணப்பட்டது. | கணனி முறைமையினைக்கு சொத்துக்கள் கொள்வனவு மீதான தனிப்பட்ட தகவல்களை தரவு ஏற்றம் செய்கையில் ஏற்பட்ட கோளாறினால் 2020 திசெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் திறைசேரி அமைப்பில் காட்டப்பட்டுள்ள பெறுமானம் குறைவாகக் காட்டப்படுகின்றது. | நிதிசாரா சொத்துக்களின் பெறுமதியினை சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் 04 சொத்துக்களின் மீளாய்வாண்டின் ஆரம்ப மிகுதிகள் மற்றும் திறைசேரி கணக்கின் படி அத்திகதியில் நிலவும் அம்மிகுதிகள் இடையில் ரூபா 12,807,492 க்கான இணங்காமை இருந்தது. | திறைசேரி அமைப்புக்கான ஆதாரமாகக் கொள்ளப்படும் NEW Cigas வேலைத்திட்டத்தில் தற்போதுள்ள சொத்துக்களுக்கான மீதிகளின் பெறுமதியினை கூடும் தன்மையிலான கொள்வனவுகள் மற்றும் ஆரம்ப மீதிகள் கணக்கிலிடப்படுவது பதிவாவது ஆரம்ப மீதியின் கூடுதல் எனவாகும். ஆண்டினுள் கொள்வனவுகளின் உண்மையான பெறுமதிகள் கணக்குப் பொழிப்பிலிருந்து கணக்கில் பதிவாவதனால் சொத்துக்களின் இறுதி மீதி ACA-6 அமைப்பும் SA 82 கணக்குக் கூற்றில் சரியாகக் காட்டப்படும். | திறைசேரி கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் இடையே உள்ள வித்தியாசங்கள் சரி செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வு ஆண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி தொடர்பான திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்கள ஏடுகள் இடையில் நிலவும் ரூபா 20,660 க்கான வித்தியாசம் பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | இவ்வித்தியாசத்தினை ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு அங்கீகாரத்தின் பெற்றுக் கொள்வதற்காக 2018.09.01 திகதி நீதி அமைச்சின் செயலாளர் மூலம் அரசாங்க நிதிப் பணிப்பாளர் அதிபதியிடம் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் இடையே நிலவும் வித்தியாசங்கள் சரி செய்யப்படல் வேண்டும். |

## 2. நீதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்று நிருபத்தின் 10.1 பந்தி தொடர்பாக வழிகாட்டல் 3.4 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ள இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்பு மீதிகள் திறைசேரியின் ஒவ்வொரு செலவின தலைப்புக்களின் இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்பு மீதிகளுடன் இணக்கப்பட்டு இருக்க வேண்டியிருந்த போதிலும் அம்மீதிகள் இடையில் ரூபா 236,309 க்கான இணக்கமின்மை இருந்தது. | திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் SA 92 இன் கீழ், நிதிப்பிரமாணம் 94(I) பிரகாரம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் மாத்திரம் காட்டப்பட்டுள்ளன. ஆனால் இணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூற்று நிதிப் பிரமாணம் 94(II)) ஒதுக்கீட்டின் கீழ் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்படல் வேண்டும். | சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) திறைசேரிக்கு அறிவிக்கப்படாத எவ்வித இணக்கப்பாடு அல்லது பொறுப்பு முன்னைய வருடத்தின் செலவினமாக தீர்க்கப்படாது இருக்க வேண்டியுள்ள போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பு க்களாக அறிவிக்கப்படாத ரூபா 333,809 ஆனது 2021 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டிருந்தது. | சேவை உடன்படிக்கையினை 2021 ஆம் ஆண்டில் செல்லுபடியாகும் விதம் கைச்சாத்திடப்பட்டு உள்ளபடியால் பொறுப்பொன்றாக உள்ளாக்கப்படவில்லை. ஏனைய வவுச்சர்களின் விபரங்கள் மேற்கொண்டு தேடப்பட்டு வருகின்றன. | சுற்றுநிருபத்தின் படி செயற்பட வேண்டும். |

## 2.2 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

கீழ் காணும் சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை அவதானிக்கப்பட்டது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை இலக்கம் 571 கொண்ட நிதிப்பிரமாணம் | காலாவதியான ரூபா 25,931 க்கான 02 வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்பினை தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் தற்போதைக்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. | நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும் |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட அரச நிர்வாகச் சுற்று நிருபம் | திணைக்களத்திற்குரிய 24 வாகனங்களின் எரிபொருள் உபயோகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான வாகனங்களின் எரிபொருள் உபயோகப் பரீட்சிப்பு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றுநிருபத்தின் படி செயற்பட வேண்டும். |

## 2.3 முற்பணம் வழங்கலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆந் திகதிய இலக்கம் 03/2015 கொண்ட அரச சுற்று நிருபத்தின் படி அலுவல் முடிக்கப்பட்டவுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட உபகட்டு நிதியினை சரிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 25,000 க்கான உபகட்டு நிதி 333 நாட்கள் தாமதத்தின் பின்னர் சரிப்படுத்தப்பட்டுள்ளது. | இலக்கம் 03/2015 அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் சில்லறைக் காசேட்டில் ஒரேயடியாக கொடுக்கையில் ரூபா 5,000 க்கான எல்லையினை தாண்டப்படாததுடன் இச்செலவினங்கள் தீடிக் கொள்வனவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள முற்பணத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ள செலவாகும். | சுற்று நிருபத்தின் படி முற்பணம் சரிப்படுத்தப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு ஆரம்பத்தின் போது வழக்கு அலுவலுக்காக நிபுணத்துவ பதிவுகள் பெற்றுக் கொடுப்பதற்கு முடியாது போன அளவினை 14,171 ஆகும். வருடம் தொடர்பாக அழைக்கப்பட்ட 35,191 உட்பட 34,689 பதிவுகள் முடிக்கப்பட்டு இருந்த போதிலும் இன்னும் 14,673 பதிவுகள் பெற்றுக் கொடுப்பதற்கு மீதியாய் இருந்தன. அதன் படி மீளாய்வாண்டில் அழைக்கப் பெற்றிருந்த பதிவுகளில் பெற்றுக் கொடுக்க முடியாது போன அளவு நூற்றுக்கு 41.69 ஆக இருந்தது. | பகுப்பாய்வுக்காக முன்னாகும் மாதிரிகளின் அளவு வருடத்தினுள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தாலும் பகுப்பாய்வு அலுவலுக்காக தேவைப்படும் பணிக் குழாமினை பல வருடங்களாக ஆட்சேர்ப்பு செய்து கொள்ளாமையினால் இந்நிலைமை உருவாகியுள்ளது. தற்போதைக்கு 28 உதவி இரசாயன பரிசோதகர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் குவிந்துள்ள மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கான வேலைத்திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் இந்நிலைமையினை தவிர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வருடாந்தம் வழக்குகள் அதிகரிக்கும் மற்றும் வழக்கு பதிவுகளை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டிற்கு நேரொத்த வகையில் பதிவுகளை வழங்குதலை அதிகரிக்கும் முறைகளை இனங்கண்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிரேஷ்ட மற்றும் மூன்றாம் தரத்திலான வெற்றிடங்கள் 31 இருந்தன. | அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் பிரதான அலுவல்களை பயனுள்ள வகையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு அத்தியாவசியமாக உள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |